THE HON. SRI M. BHAKTAVATSALAM : பொள்ளாசசி தாலூகாவில் 31 ஆயிரத்தி சில்லரை ஏக்கரும் வேறு ஒரு இடத்தில் 11 ஆயிரத்தி சில்லரை ஏக்கரும் காப்பி, டீ பயிரிடுவதற்காக அஸைன் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு ஏக்கர் ஒன்றுக்கு மூன்று ரூபாய், அரை ரூபாய் 62 நயாபைஸா என்று வசூலிக்கப்பட்டுவருகிறது. இதை தவிர வேறு ஒரு இடத்திலும் இப்போது எடுக்கவில்லை என்றுதான் தெரிகிறது.

SRI J. MATHA GOWDER : நீலகிரி ஜில்லாவில் கூடலூர் தாலூகாவில் ஆப்டர்லோனிவ் ரிசர்வ் என்ற இடத்தில் சுமார் 3,000 ஏக்கர் வெள்ளைக்காரர்களுக்கு 99 வருடத்திற்கு கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது அந்த காலாவதி முடிவடையப்போகிறது. ஆகவே அந்த தோட்டங்களை சர்க்கார் எடுத்து மக்களுக்கு விநியோகம் செய்ய சர்க்கார் பரிசீலனை செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு தனிக் கேள்வி வேண்டும்.

SRI K. SATTANATHA KARAYALAR : சில ஜில்லாக்களில் இருக்கும் தோட்டங்களை ரப்பர், தேயிலை, காப்பி போன்றவைகள் பயிரிடுவதற்காக தனிப்பட்ட நபர்களுக்கு கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சில இடங்களில் ரப்பர் பயிரிடுவதற்கு கேட்கிறார்கள். கன்னியாகுமாரி ஜில்லாவில் சுமார் 3,000 ஏக்கர் வரையுள்ள இடத்தில் அரசாங்கமே நேரடியாக நடத்துவதற்கு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.

College Education for the students passing out of the post-basic schools

* 21 Q.—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) போஸ்ட் பேஸிக் பள்ளிகளிலிருந்து தேறிய மாணவர்களின் மேல் படிப்புக்கு அதே ஆதாரக் கல்வி முறையில் கல்லூரிகளில் படிக்க அரசாங்கம் ஏதேனும் திட்டமிட்டிருக்கிறதா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) No, Sir. The admission of students of post basic schools into colleges for Higher education and provision of collegiate education on the basic pattern are matters for the University to decide. It is learnt that the Universities are considering this matter at the Inter-University level.

SRI A. VEDARATHNAM : இப்போது போஸ்ட் பேஸிக் பயிற்சியில் தேறிய மாணவர்கள் மேற்படிப்புக்கு போவதற்கு வசதியில்லாத முறையில் இருக்கிறது. ஆகவே இதற்காக அரசாங்கம் புதிதாக 5 பள்ளிக்கூடங்களை இந்த ஆண்டில் திறப்பதற்கு திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்போதே அதற்கு வசதி செய்யவேண்டும். அதற்கான வேலைகளை செய்வதற்காக யூனிவர்ஸிட்டியை தூண்டிவிட்டு வேலைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கல்லூரிகளில் மேற்படிப்பு படிப்பதற்கு ஆதாரவு கல்வி அவசியமில்லை. இப்போது நம்முடைய குறிக்கோள் போஸ்ட் பேஸிக் பரீட்சையில் தேறியவர்களை மற்ற மாணவர்களோடு கல்லூரிகளில் சேர்த்துக்கொள்வதைப்பற்றி இன்டர் யூனிவர்ஸிட்டி போர்டு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

20th April 1959]

Sri K. VINAYAKAM : Sir, what is the attitude or reaction of the University of Madras towards the basic studies? Is it encouraging or discouraging?

Mr. SPEAKER : How can the Finance Minister answer this question?

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, I do not know the attitude at all of the University in regard to this matter. I have already stated that it is under the consideration of the Inter-University Board.

Lands for Harijans

* 25 *Q* —Sri M. K. SOMASUNDARAM (on behalf of Sri M. C. MUTHUKUMARASWAMY) : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பரா—

(அ) நாது ராஜ்ய எல்லைக்குள் உள்ள பஞ்சமதரிசு (lands reserved for Harijans) நிலங்களின் விஸ்தீரணம் என்ன ?

(ஆ) நிலத்தீர்வை போடாத புன்செய் நிலங்களின் (unassessed waste lands) விஸ்தீரணமென்ன ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Lands are reserved for scheduled class, not for Harijans. The extent of land reserved for scheduled castes as on 30th June 1958 was 14,440 acres.

(*b*) The extent of unassessed waste lands available for assignment on 30th June 1958 was 94,137 acres.

Sri P. G. MANICKAM : ஒவ்வொரு ஜில்லாவிலும் எவ்வளவு நிலங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பதை தெரிவிக்க முடியுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இப்போது அந்த தகவல் என்னிடமில்லை.

Sri M. K. SOMASUNDARAM : ஸார், ஹரிஜனங்கள் பலவருடங்களாக அனுபவித்து வரும் நிலங்கள் இன்னும் பல இடங்களில் ஜாரி செய்து கொடுக்கப்படாமல் இருந்துவருவதற்கு காரணம் என்ன ? இவ்விதம் இருக்கும் இடங்களில் உடனடியாக ஜாரி செய்து கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

Mr. SPEAKER : How does this supplementary arise out of the main question? If the Hon. Minister is prepared to answer the question, I have no objection.

The Hon. Sri C. SUBRAMANIAM : If the Speaker says that it does not arise, the supplementary does not arise.

Mr. SPEAKER : I am not saying that it is out of order. I say that the supplementary does not arise.